**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 24/2021**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியாகிய **ராஜேஷ். PW.1** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 22.04.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேஷ் | | | |
| Father Name | : | ரவிச்சந்திரன் | Court | : | |
| Village | : | மேலையூர், பூம்புகார். | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 37 | | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் 1 வது வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். 2ம் வாதி எனது மனைவியாவார். 2ம் வாதிக்காகவும் சேர்த்து நான் எனது பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

தாவா சொத்தை பொருத்து 30.12.2020 அன்று எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.12.2021 தேதியிட்ட 8ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள புல எண் முழுவதற்கும் உள்ள பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.03.2020ல் தாவா புல எண் முழுவதற்கும் உள்ள 8ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.03.2020ல் 8ம் பிரதிவாதியின் கணவர் சாமிநாதன் பெயரில்

கணினி சிட்டா **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.06.2020 தேதியிட்ட 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் 8ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் சாமிநாதன் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.07.2020 தேதியிட்ட 1 முதல் 4 பிரதிவாதிகள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 8ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் சாமிநாதன் கொடுத்த பதிலறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12.01.2021 தேதியிட்ட 5ம் பிரதிவாதி அலுவலகம் மூலம் வாதிகளுக்கு கொடுத்த அழைப்பாணையின் அசல் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் வாதி மற்றும் 8ம் பிரதிவாதிக்காகவும் மாண்பமை மாவட்ட நீதிமன்றம் வழங்கிய CRLMP 581/2022 என்ற உத்தரவின் நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.